**அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2018 )**

# 12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுவது -------
   (அ) கிராமப்புறங்களில் மட்டும் (ஆ) நகரங்களில் மட்டும்
   (இ) மாநில தலைநகரங்களில்மட்டும் ( ஈ) நகர்புறங்களிலும் , கிராமப்புறங்களிலும்
2. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு --------
   (அ) வாரிய அமைப்பு (ஆ) பொதுக்கூட்டுரு (இ) துறைமுறை அமைப்பு (ஈ) அரசு நிறுமம்
3. தனியாள் வணிகரின் கடின உழைப்பிற்கு தூண்டுகோலாய் அமைவது -------
   (அ) இலாபம் (ஆ) நட்டச்சம் (இ) திறமை (ஈ) மேற்கண்ட ஏதும் இல்லை
4. கூட்டாண்மை பதிவு ----------
   (அ) கட்டாயம் (ஆ) விருப்பத்தின் பேரில் (இ) அவசியம் இல்லை
5. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு ----------
   (அ) பூரண நல்ல நம்பிக்கை (ஆ) கூட்டாளிகளிடையே உறவு (இ) கூடி தொழில் செய்தல்
6. நிறுமத்தின் சொத்துக்களை நிர்வகிக்கும்பொழுதும், பயன்படுத்தும்பொழுதும் இயக்குநர்கள் --------- நிலையில் செயல்படுகின்றனர்.
   (அ) அதிகாரிகள் (ஆ) பொறுப்பாண்மையர் (இ) முகவர்கள் (ஈ) தரகர்கள்
7. தவறான ஒன்று எது?
   பங்கு சான்றிதழில் கீழ்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.
   (அ) பங்குநரின் பெயர் (ஆ) பங்குகளின் எண்ணிக்கை
   (இ) பங்குகள் மீது செலுத்தப் பெறாத தொகை (ஈ) பங்குகளின் தனிப்பட்ட எண்கள்
8. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது -------
   (அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும் (ஆ) வாக்குரிமையைச் செலுத்துவதில்
   (இ) பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போழ்து பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்
9. பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை --------
   (அ) 2 (ஆ) 5 (இ) 7 (ஈ) 10
10. ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை உணர்த்தும் ஆவணம் ---------
    (அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு (ஆ) நிறுமச் செயல் விதிகள்
    (இ) தகவலறிக்கை (ஈ) சட்டமுறை உறுதி விளம்பர்
11. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு -----------
    (அ) ₹. 5,000 க்கு (ஆ) ₹. 5,00,000 க்கு (இ) ₹. 50,000 க்கு (ஈ) ₹. 500 க்கு
12. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி ----------
    (அ) 12 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் (ஆ) 15 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் (இ) 18 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
13. ஒரே சமயத்தில் --------- நிறுமங்களுக்கு மேல் ஒரு நபர் மேலாண்மை இயக்குநராக பணியாற்ற முடியாது.
    (அ) 4 (ஆ) 3 (இ) 2 (ஈ) 5
14. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது ---------
    (அ) சரக்கு (ஆ) சேவை (இ) நிதி பத்திரங்கள் (ஈ) நாட்டின் பணம்



15. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் ---------
    (அ) கலைமான் (ஆ) கரடி (இ) காளை (ஈ) முடவாத்து
16. செபியில், சபைத் தலைவர் மற்றும் வாரியத்தின் ----------- உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றது:
    (அ 6 (ஆ) 5 (இ) 7 (ஈ) 3
17. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது ----------
    (அ) கிராமங்களில் (ஆ) மாவட்டத் தலைநகரங்களில் (இ) மாநிலத் தலைநகரங்களில் (ஈ) நகர்ப்புறங்களில்
18. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது ------------
    (அ) கடன் (ஆ) சேவை (இ) சரக்குகள் (ஈ) ரொக்கம்
19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் ------------
    (அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக்கழகம் (இ) அரசு நிறுமம்
20. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது ------------
    (அ) மைய அல்லது மாநிலஅரசின் சட்டம் (ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956
    (இ) அரசாணை (ஈ) அரசியல் அமைப்பு சாசனம்

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. கூட்டாண்மை என்ற பதத்தினை விளக்குக.
22. பொதுக் கூட்டுரு என்றால் என்ன ?
23. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?
24. கூட்டாண்மை ஒப்பாவனம் என்றால் என்ன ?
25. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?
26. நீடித்த வாழ்வு என்றால் நீவிர் அறிவது யாது ?
27. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும் ?
28. சிறப்புத் தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும் ?
29. பதிலாள் என்றால் என்ன ?
30. பட்டியலிடுதலின் பயன்கள் யாவை ?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. எந்த காரணங்களுக்காக அமைப்பைப் பற்றி படிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ?
32. தனிவணிகரின் எல்லா குறைகளையும் கூட்டாண்மை களைகிறதா? விளக்கம் தருக.
33. இந்துக் கூட்டு குடும்பம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
34. ஆதரவு பங்காதயம் என்றால் என்ன ?
35. கூட்டாளிகளின் எவையேனும் ஆறு உரிமைகளை விளக்குக
36. இயக்குநர்கள் நியமிக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.
37. பட்டியலிடுதல் என்றால் என்ன ?
38. பரஸ்பர நிதியின் வரைவிலக்கணம் கூறுக.
39. முதலீட்டாளர், ஊக வணிகர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ? ( ஏதேனும் 3 )
40. இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு, துறைமுறை அமைப்பே சிறந்தது என எதனால் கூறப்படுகிறது ?

## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்களில் எவையேனும் ஐந்தினை விளக்குக.

( அல்லது )

பங்கு மாற்றகத்தினால் முதலீட்டாளருக்கு ஏற்படும் நன்மைகள் யாவை ?

42. கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவு சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் ஐந்தினை எழுதுக.

( அல்லது )

தகவல் அறிக்கை என்றால் என்ன, அதன் பொருளடக்கங்கள் யாவை ?

43. ஏதேனும் ஐந்து வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

( அல்லது )

துறைவாரி அமைப்பின் இயல்புகளை விளக்குக.

44. கூட்டாண்மை நிறுவனம் நீதிமன்றத்தால் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

( அல்லது )

அரசுத் தொழில்களின் நோக்கங்களில் ஐந்தினை விவரி.

45. அமைப்பின் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை சுருக்கமாக விவரிக்க.

( அல்லது )

கூட்டறவு சங்கத்தின் ஏதேனும் ஐந்து குறைபாடுகளை விவரிக்க.

46. செபியின் பணிகள் யாவை? ( ஏதேனும் பத்து )

( அல்லது )

ஒரு நிறுமச் செயலரின் சட்டமுறைக் கடமைகள் யாவை?

47. தனிவரையறை நிறுமத்திற்கும் பொது வரையறை நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது )

செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 10)

B.BALAJI, GHSS,PARANTHUR , KANCHIPURAM DT. 9629647613